கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில்

# சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் விளையாட்டு உபகரணங்கள் - நலத்திட்ட உதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்குகிறார்! இரா.விஜயன் முன்னிலை!

சென்னை, மார்ச்.1

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (02.03.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் காரனோடை பஜார் வீதியில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு வி.பிரேம் குமார், டி.ரவி தாஸ், டி.எம். கிருஷ்ணன், என்.விஜய், கே.எஸ்.முருகன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட பிரதிநிதி இரா. விஜயன் முன்னிலை வகிக்கிறார்.

சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளரும் சோழவரம் ஒன்றிய துணைப் பெருந்தலைவருமான மீ.வே. கருணாகரன் விழாவிற்கு தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் சிறப்பு அழைப்பாளர்களாக சோழவரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் நா.செல்வ சேகரன், ஏ.காசிம் முகம்மது, கே.எம். துரைவேல், ப.சீனிவாசன், கி.வீரம்மாள், செ.அரசு, பா.சேகர், பொன்.கோதண்டன்,

காரனோடை கிளைக் கழக நிர்வாகிகள்: சண்முகா நகர் கே.அன்புமணி ஜே. பார்த்திபன் வி.சுமதி எஸ்.சுந்தர் எம்.பிரபாகரன் பஜார் கிளை நிர்வாகிகள்: சுகுமாரன், ஷாம்லி, ஆகாஷ், பிரகாஷ், கதிரவன், முனிவேல் நகர் கிளைக் கழக நிர்வாகிகள்: ப.முத்துவேல் எஸ். அமுதா பி.ஆனந்த் உமாபதி டி.பூபதி கணேஷ் நகர் கிளைக் கழக நிர்வாகிகள்: கன்னியப்பன், மோனிகா, ஜெயராஜ், லோகேஸ்வரன், பாஸ்கரன், இ.மகேஷ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆர்.நவீன் குமார், ஆர். விக்னேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி தலைமை! ஜி.கென்னடி பிரகாஷ் முன்னிலை!

# புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

## மாவட்டச் செயலாளர்– அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, பிப்.28

புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி தலைமையில் மாபெரும் மருத்துவ முகாம் (2.3.2025) அன்று ஞாயிற்றுக்கிழமை சமுதாய நலக்கூடம் மூவரசன்பட்டில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு ஜி கென்னடி பிரகாஷ் முன்னிலையிலும் ஒன்றிய துணை பெருந்தலைவர் பி பிரசாத், மூவரசம்பட்டு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம்பி பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரையில் மாவட்டக் கழகச் செயலாளர் சிறு குரு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் எஸ் மனோகரன், திருமதி.சி.லதா,கே.பெருமாள், திருமதி.கே.விஜயா, டி.கிரண்ராஜ், ஜெ. .விக்டோரியா, எஸ்.சதீஷ், திருமதி.கே.எபநேசர் ரஜிலா, திருமதி.பி.உமா, திருமதி.ஏ.லாவண்யா, கே. சுகுமார், ஏ. ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இறுதியில் ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஜி.கே.வி. அன்பு பிரபாகரன் நன்றியுரை ஆற்றுகிறார்.

---

லயன் எஸ்.ஜி.மாதவன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழகத் தலைவர் பிறந்த நாள் விழா!

# மதுரவாயல் 147வது வட்டத்தில் மருத்துவ முகாம் நலத்திட்ட உதவிகள் அறுசுவை உணவு!

## காரம்பாக்கம் க.கணபதி - நொளம்பூர் வே.ராஜன் - ரமணி மாதவன் வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச். 1

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தலைமையில் இன்று (01.03.2025 சனிக்கிழமை) காலை 7.00 மணிக்கு, க.பிருந்தவனம் ஏற்பாட்டில் ஆலபாக்கம் நார்சந்தியில் கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

மதுரவாயல் வடக்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் உதயம் வி.வேணு ஏற்பாட்டில் ஆலப்பாக்கம் ஸ்ரீதேவி நகரில் கழக கொடி ஏற்றி 1000 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது. பகுதிப் பிரதிநிதி டி.ஜெயமுருகன் ஏற்பாட்டில் அஷ்டலட்சுமி நகர் போலீஸ் பூத் அருகில் 500 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்பு வழங்கப்படுகிறது.

147 வது வட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் எம்.தேவேந்திரன் ஏற்பாட்டில் கழகக் கொடியேற்றி அஷ்டலஷ்மி நகர் தீன் மஹால் ஆட்டோ நிறுத்த ஓட்டுனர்களுக்கு இனிப்பு வழங்கி 100 பேருக்கு சீருடை வழங்கப்படுகிறது. 147 வது வட்ட இளைஞரணி அமைப்பாளர் பி.மணி ஏற்பாட்டில் கிருஷ்ணா நகர் 4 வது தெருவில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு காலை உணவு வழங்கப்படுகிறது.

147 வது வட்ட துணைச் செயலாளர் ஜி.பி.ஆனந்தகுமார் ஏற்பாட்டில் திடீர் நகர் பெருமாள் கோவில் அருகில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மாவட்டப் பிரதிநிதி ஜி.குப்புசாமி ஏற்பாட்டில் சீமாத்தம்மன் நகர் சீமாத்தம்மன் கோவில் அருகில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது.

147 வது வட்ட துணைச் செயலாளர் எஸ்.முருகன் ஏற்பாட்டில் மேட்டுக்குப்பம் சீமாத்தம்மன் கோவில் அருகில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது. மதுரவாயல் வடக்கு பகுதி கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் வி.வெங்கடேசன் ஏற்பாட்டில் மேட்டுக்குப்பம் பிள்ளையார் கோவில் அருகில் கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் தலைமையில் கங்கா நகர் அரசினர் பள்ளி அருகில் கழக கொடி ஏற்றி 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது

147 வது வட்டப் பொருளாளர் என்.புருஷோத்தமன் ஏற்பாட்டில் பல்லவன் நகர் சந்திப்பில் கழகக் கொடியேற்றி 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் ஏற்பாட்டில் பிருந்தாவனம் முதியோர் காப்பாகத்தில் 250 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்படு கிறது. மதுரவாயல் வடக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஜி. எம்.மனோஜ் மாதவன் ஏற்பாட்டில் ஸ்ரீ தேவிநகர் சிவ சக்தி காப்பகத்தில் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 02.03.2025 காலை, மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஐ.அன்பரசு ஏற்பாட்டில் திடீர் நகர் பெருமாள் கோயில் அருகில் 500 பேருக்கு வேட்டி சேலை வழங்கப்படுகிறது. 147 வது வட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கே.சி.சிவராஜ் ஏற்பாட்டில் கிருஷ்ணா நகர் ஆட்டோ நிற்கத்தில் நீர் மோர் வழங்கி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கப்படுகிறது.

147 வது வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ். ஜி.மாதவன் ஏற்பாட்டில் சீமாத்தம்மன் கோவில் அருகில் இலவச மருத்துவ முகாம் நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து ஜானகி நகர் நாற்சந்திப்பில் 1000 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது. 09.03.2025 அன்று காலை 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ். ஜி.மாதவன் ஏற்பாட்டில் சக்கரபாணி நகர் 14 வது தெருவில் இலவச மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து பல்லவன் நகர் மனவளர்ச்சி குன்றியவர்கள் காப்பகத்தில் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. 16.03.2025 அன்று 147 வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஜி.மாதவன் ஏற்பாட்டில் பாரதி நகர் பூங்காவில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

23.03.2015 அன்று பகுதி வர்த்தக அணி துணை அமைப்பாளர் இ.நாகேந்திரன் ஏற்பாட்டில் கார்த்திகேயன் நகர் பாலமுருகன் ஆலயம் அருகில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெறுகிறது. 02.04.2025 அன்று மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் புருஷோத்தமன் கோபிநாத் ஏற்பாட்டில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

09.04.2025 அன்று 147 வது வட்டச் செயல்வீரர் என். கே.கல்யாணகுமார் ஏற்பாட்டில் ருக்மணி நகரில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெறுகிறது.

16.04.2025 அன்று பகுதி அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.ஜெயக்குமார் ஏற்பாட்டில் ஆலப்பாக்கம் பொன்னியம்மன் கோவில் அருகில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

இதில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் எம்.சி, 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி கல்விக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் ஆகியோர் கலந்து கொண்டு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (01.03.2025 சனிக்கிழமை) நாள் முழுதும் அம்மா உணவகங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.

இவ்வாறு மேனாள் கவுன்சிலர், 147 வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன் தலைமையில்

# முதல்வர் பிறந்த நாள்: கழகக் கொடி ஏற்றி 500 பேருக்கு காலை சிற்றுண்டி!

## பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி. வழங்குகிறார்!

சென்னை, மார்ச்.1

தமிழ்நாட்டின் திராவிட மாடல் முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவ னங்கள் துறை அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான, அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவுறுத்தலின்படி, 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன் தலைமையில், இன்று (01.03.2025) காலை 7 மணிக்கு, எம்.ஜி. ஆர். ரோடு, ஸ்டேட் பேங்க் காலணியில் உள்ள அண்ணா சிலை மற்றும் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, கழக கொடி ஏற்றி, ஏழை எளிய பொது மக்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் 500 பேருக்கு காலை சிற்றுண்டியை ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டலக்குழு தலைவருமான, என்.சந்திரன் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். கே.இப்ராகிம், கலந்துக் கொண்டு சிறப்பிக்க இருப்பதால் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் , மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மற்றும் மூத்த கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

தியாகராயர் நகர் மேற்கு பகுதி 133வது வட்டத்தில்

# கழகக் கொடி ஏற்றி நல உதவிகள் வழங்கல்!

## வட்டச் செயலாளர் பி.ஜெய்குமார் வேண்டுகோள்!

சென்னை,மார்ச்.1

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இன்று (1.3.2025 சனிக்கிழமை) 133 வது வட்டத்தில் உள்ள பாகம் வாரியாக 1.3.2025 அன்று அனைத்து தெருக்களில் இருவண்ண கொடி ஏற்றி கழகப் பிரச்சார பாடல்களை ஒலி பெருக்கி மூலம் தெரிவித்து உணவுகள் மற்றும் இனிப்புகள் வழங்கி சிறப்பிக்கப்பட விருக்கிறது.

நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர் பி.ஜெய்குமார் தலைமை வகிக்கிறார். சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல் .ஏ மற்றும் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் மற்றும் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி , தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம். சி ஆகியோரின் ஆலோசனைப்படி நிகழ்ச்சி நடைபெற உள்ளது .இந்நிகழ்ச்சியில் 133 வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட ,பகுதி ,வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக உறுப்பினர்கள் நிர்வாகிகள் கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் என்று வட்டச் செயலாளர் பி.ஜெய் குமார் தெரிவித்துள்ளார்.




